**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.241/2018** வா.சா.5 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சம்பத் | **வயது** | : | 50 |
| **த.பெ** | : | நடராஜன் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | சாணார்பாளையம் | **தொழில்** | : | சர்க்கரை ஆலையில் வேலை செய்கிறேன். |

**18.08.2025 – வா.சா.5 முதல் விசாரணை (சாட்சி அழைப்பாணை முலம் அழைத்து சாட்சியம் அளிக்கிறார்)**

வாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் வீடு சாணார்பாளையம், பிள்ளையார்கோவில் தெருவில் உள்ளது. எனக்கு தெரிந்து சுமார் 40 வடருடங்களாக வாதிகள் மேற்படி வீட்டில் தான் வசிக்கிறார்கள். வாதிகளின் பெற்றோர்கள் அவர்களோடு மேற்படி வீட்டில் வசித்துவந்தார்கள். தற்போது அவர்கள் காலமாகிவிட்டார்கள். தற்போதும் வாதிகள் மேற்படி வீட்டில் தான் வசித்துவருகிறார்கள்.

**வா.சா.5 குறுக்கு விசாரணை**

வாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். நீதிமன்றத்தின் அழைப்பாணை எனக்கு வருவதற்கு முன்பு என்னிடம் அவர்கள் சாட்சியம் அளிக்க என்னை அழைத்தார்களா என்றால் இல்லை. எனக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை வந்தது என்று என்னிடம் கூறி வரசொல்லி வாதிகள் கூறினார்கள். இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் பழனி, கண்ணன் மீது தாக்கல் செய்துள்ளாரா அல்லது கண்ணன் பழனி மீது தாக்கல் செய்துள்ளாரா எ்னறால் எனக்கு தெரியாது கண்ணன் என்னுடைய முறைமாமா ஆவார். வழக்கு சொத்தின் சா்வே நெம்பர் எனக்கு தெரியுமா என்றால் தொியாது. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. வாதிகள் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. நானும், வாதிகளும் ஒரே தெருவில் தான் வசித்துவருகிறோமா என்றால் இல்லை நான் சேத்பட் மெயின்ரோடில் வசித்துவருகிறேன். அவா்கள் பிள்ளையார்கோவில் தெருவில் வசிக்கிறார்கள். பழனி மற்றும் ஆறுமுகம் அவர்கள் வசித்துவரும் வீடு எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எதற்காக என்னை அழைத்தார்களா அதற்கான கேள்விளை என்னிடம் கேட்கவில்லை ஆகையால் என் சாட்சியம் நிராகரிக்கபடவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-B.Salma,
District Munsif,
Polur.